©
GOVERNMENT OF TAMIL NADU
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 39] CHENNAI, TUESDAY, FEBRUARY 25, 2014
Maasi 13, Vijaya, Thiruvalluvar Aandu–2045

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

#### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், தஞ்சாவூர் மாவட்டம்.**

**தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஊராட்சி ஒன்றியம், பெரமூர் ஊராட்சி மன்ற தலைவரை பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*( ந.க.எண் 5766/2013/அ3 )*

**No. VI(2)/61(a)/2014.**

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஊராட்சி ஒன்றியம், பெரமூர் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. நா. ராஜசுலோச்சனா என்பவர் அவ்வூராட்சியின் நிர்வாக அலுவலர் என்ற முறையில் செயல்படும் போது ஊராட்சியில் நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக ஆய்வில் கண்டறியப்பட்டு, பெரமூர் ஊராட்சி தலைவர் திருமதி. நா. ராஜசுலோச்சனா என்பவர் மீது 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205-ன்கீழ் விளக்கம் கோரும் அறிவிப்பு வழங்கப்பட்டது.

பெரமூர் ஊராட்சி மன்றத் தலைவர் அவர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு தனித்தனியே தனது விளக்கத்தினை அளித்திருந்தார். விளக்கங்கள், அலுவலக ஆவணங்கள் ஆகியன விதிமுறைகளுடன் ஆய்வு செய்யப்பட்டன. ஊராட்சி மன்றத் தலைவர் அளித்துள்ள விளக்கங்கள் ஏற்ககூடியதாக இல்லை. எனவே, 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 205(2)-ன் படி பெரமூர் கிராம ஊராட்சித் தலைவர் திருமதி. நா. ராஜசுலோச்சனா என்பவரின் நிர்வாகத்தில் காணப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக அவரை பெரமூர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டு, அது குறித்து அந்த கிராம ஊராட்சியின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக பெரமூர் கிராம ஊராட்சி உறுப்பினர்களின் கூட்டத்தினை அவ்வூராட்சி மன்ற அலுவலகத்தில் நடத்திட திருவையாறு வட்டாட்சியருக்கு உத்தரவிடப்பட்டது.

அதன்படி திருவையாறு வட்டாட்சியர் பெரமூர் ஊராட்சியின் கூட்டத்தை 12-02-2014 அன்று காலை 11.00 மணிக்கு அவ்வூராட்சி மன்ற அலுவலகத்தில் கூட்டியுள்ளார். கூட்டத்தில் பெரமூர் ஊராட்சியின் 9 உறுப்பினர்களும் கலந்து கொண்டுள்ளனர். கூட்டத்தில் ஊராட்சி மன்றத் தலைவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், அதற்கு அன்னார் அளித்துள்ள விளக்கங்கள், ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்யும் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர் அவர்களின் யோசனை ஆகியவற்றை முன்வைக்கப்பட்டு உறுப்பினர்களின் கருத்து கேட்கப்பட்டது. அதில், அனைத்து 9 உறுப்பினர்களும் ஊராட்சி மன்றத் தலைவரின் விளக்கத்தினை ஏற்றுக்கொள்வதாக இல்லை என்று தெரிவித்தனர்.

ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்யும் ஆய்வாளரின் யோசனையினை 7-வது வார்டு உறுப்பினர் திருமதி. சாந்தி நீங்கலாக மற்ற அனைத்து 8 உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டனர்.

மேலும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் அரசு கூடுதல் வழக்கறிஞரும் இவர் மீது நடவடிக்கை தொடர எவ்வித தடையும் இல்லை என்று சட்ட ஆலோசனை வழங்கியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஊராட்சி ஒன்றியம், பெரமூர் ஊராட்சிமன்றத் தலைவர் திருமதி. நா. ராஜசுலோச்சனா என்பவருக்கு வழங்கப்பட்ட விளக்கம் கோரும் குறிப்பாணை அதற்கு அன்னார் அளித்த விளக்கம் ஆகியவை உளத்தேர்வின்படி கூர்ந்தாய்வு செய்யப்பட்டு பெரமூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. நா. ராஜசுலோச்சனா என்பவரை அவ்வூராட்சி மன்றத்தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்படுகிறது.

இவ்வாணை குறித்த அறிவிக்கை 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 262 (1)-ன்படியும் சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அரசு முதன்மை செயலர் அவர்களின் கடித ந.க.எண்.3205/ப.ரா.4/2010-1, நாள். 01-03-2010 தேதிய அறிவுரைகளின்படியும் ***தமிழ்நாடு அரசிதழில்*** சிறப்பு வெளியீடாக வெளியிடப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

தஞ்சாவூர்,
2014 பிப்ரவரி 25.

**டாக்டர். என். சுப்பையன்,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.